**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு மா.சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆவணி திங்கள் 09–ம் நாள்
2025–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25–ம் நாள் திங்கட்கிழமை

******

**இடைமனு எண். 07/2025–ல் – அசல் வழக்கு எண். 246/2017**

1.அமிர்தலிங்கம்
2.பிரசன்னா
3.மதனா
4.சிங்காரவேலன் .....மனுதாரர்கள்/1,3,4,7 பிரதிவாதிகள்

**...எதிராக...**

1.சண்முகசுந்தரம் ......1–ம் எதிர்மனுதாரர்/வாதி
2.அருணா ......2–ம் எதிர்மனுதாரர்/ 2–ம் பிரதிவாதி
3.சார் – பதிவாளர்,
செம்பனார்கோயில்
4.தமிழ்நாடு அரசு சார்பாக அதன்
மாவட்டஆட்சியர்,
மயிலாடுதுறை .... 3,4 எதிர்மனுதாரர்கள்/ 5,6 பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 19.08.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு A.ஆத்மநாதன் அவர்களும், 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், 2,3 மற்றும் 4–ம் எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளதாலும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுவில் விவரிக்கப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்கள் உரியகாலத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.08.25 17:16:36 +0530

ஆவணங்களை ஏற்றுக்கொள்ள உத்தரவாக வேண்டி மனுதாரர்களால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை–8 விதி 1 A (3) –ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்</u>**

(i) 3–ம் மனுதாரர் 4–ம் பிரதிவாதி ஆவார். இந்த மனுவை 3–ம் மனுதாரர் தனக்காகவும் மற்ற மனுதாரர்களுக்காகவும் தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கானது வாதிகளால் பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர்கள்/1,3,4,7 பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்ய கெடு போடபட்டுள்ளது. மனுவில் விவரிக்கப்பட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய மனுதாரர்களுக்கு சட்ட ஆலோசனை கிடைக்க பெற்று ஆவணங்களை தாக்கல் செய்துள்ளனர்.

(ii) மனுதாரர்கள் வேண்டுமென்றோ, அலட்சியமாகயோ உரியகாலத்தில் தாக்கல் செய்யாமல் இருக்கவில்லை. மனுவில் விவரிக்கப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்கள் உரியகாலத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து ஆவணங்களை ஏற்றுக்கொள்ள உத்தரவாக வேண்டி மனுதாரர்களால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**<u>2. 1–ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>**

(i) மனுதாரர்களின் மனு சரியல்ல. சட்டப்படியும் நியாயப்படியும் நிலைநிற்க கூடியது அல்ல. மனுவுக்கு ஆதரவாக அபிடவிட்டில் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. மனுவில் கூறப்பட்டுள்ள 1 மற்றும் 2 ஆவணங்கள் மனுதாரர்களின் செல்வாக்கால் பெறப்பட்ட ஆவணங்கள் ஆகும்.மேற்படி மனுவின் 3 முதல் 5 ஆவணங்கள் இவ்வழக்கிற்கு பிறகு பெறப்பட்ட ஆவணங்கள் ஆகும்.

(ii) இந்த ஆவணங்களை மனுதாரர்களால் முன்பே தாக்கல் செய்திருக்க இயலும். ஆனால் இவ்வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்தில் தற்போது தாக்கல்

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.08.25 17:16:43 +0530

செய்வது நீதிமன்ற நேரத்தை வீணடிக்கும் செயலாகும். வாதியை அலை கழிக்கும் நோக்கத்திலேயே மனுதாரர் இதுபோன்ற மனுக்களை தாக்கல் செய்கிறார். எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரர்கள்/1,3,4,7 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா ?**

**5. <u>தீர்வு:</u>**

(i) மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி வழக்குத் தொடர்ந்து நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர்கள் தரப்பில் மனுவில் விவரிக்கப்பட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய மனுதாரர்களுக்கு சட்ட ஆலோசனை கிடைக்க பெற்று ஆவணங்களை தாக்கல் செய்துள்ளனர் என்றும், எனவே மனுவில் விவரிக்கப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்கள் உரிய காலத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

(ii) எதிர்மனுதாரர் தரப்பில் மனுவில் கூறப்பட்டுள்ள 1 மற்றும் 2 ஆவணங்கள் மனுதாரர்களின் செல்வாக்கால் பெறப்பட்ட ஆவணங்கள் என்றும், மேற்படி மனுவின் 3 முதல் 5 ஆவணங்கள் இவ்வழக்கிற்கு பிறகு பெறப்பட்ட ஆவணங்கள் என்றும், அசல் வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

(iii) மனுதாரர்கள் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள்

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.08.25 17:16:50 +0530

நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. மேலும் இம்மனுவை அனுமதிப்பதால் வழக்கின் விசாரணை எந்தவிதத்திலும் பாதிக்கப்படபோவதும் இல்லை, எதிர்மனுதாரர்களுக்கும் எவ்விதமான பாதிப்பும் ஏற்படபோவதில்லை. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று கருதி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.08.25 17:16:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் | - இல்லை - |
| மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | - இல்லை - |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | - இல்லை - |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் | - இல்லை - |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.08.25 17:17:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**நேரிய/வரைவு உத்தரவு**
இடைமனு எண்.07/2025-ல்
அசல் வழக்கு எண்.246/2017
நாள்.25.08.2025.